[illegible]/ ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 14 வியாழக்கிழமை (29-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 243

# திருமலையில் அதிரடி! ஆறு படையினர் பலி!!

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 29

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று அதிகாலை படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; அவர்களின் ஆயுத தளபாடங்கள் பலவற்றை புலிகள் கைப்பற்றினர்.

திருமலையில் உள்ள சுமித்திரா முகாமுக்கும், சாம்பல்பிட்டி முகாமுக்கும் இடையில் உள்ள பிரதான வீதியில் இரவு நேரக் காவல் கடமையை முடித்துவிட்டுத் தங்கி நின்ற இராணுவ அணிமீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் பத்துப் பேரைக் கொண்ட அந்த அணி மீது நடத்தப்பட்ட இத் திடீர் தாக்குதலில் ஆறு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்: ஏனையோர் அங்கிருந்து தப்பி ஓடினர்.

இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

(உ-எ-5-6)

### கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

திருமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு :-

- ஏ. கே. எல். எம். ஜி. — 01
- 203 ரக ஷெல் லோஞ்சர் — 01
- ரி 56 ரக துப்பாக்கி — 04
- ஏ கே. ரம் மகஸீன் — 05

(6 ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் தாக்குதல்

மட்டக்களப்பில் வாகரை கண்டலடி என்ற இடத்தில் கடந்த திங்கள் மாலை 5 30 மணியளவில் பஸ் ஒன்றில் வந்த படையினர் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

அதனையடுத்து அங்கு இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் வர்ணன் (செல்லத்தம்பி மகேந்திரன்— ஆரயம்பதி—காத்தான்குடி) வீரச்சாவடைந்தார். (இ 5)

## ஸ்ரீலங்கா கடற்படை சூடு இந்திய மீனவர் காயம்

### கச்சதீவுக் கடலில் சம்பவம்

சென்னை, ஜூலை 29

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராமேஸ்வர மீனவர்கள் மூவர் காயமடைந்தனர்.

கச்சதீவுக்கடல் பகுதியில் செவ்வாய் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

காயம் அடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார். இ-எ-க)

## மணலாறு தாக்குதலில் 70 படையினர் பலி!

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது கடந்த ஞாயிறு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை எழுபது வரை இருக்கும் என பி.பி.ஸி. நேற்றிரவு குறிப்பிட்டது,

காணாமற் போனதாகக் கருதப்பட்ட 18 படையினர் கொல்லப்பட்டு விட்டனர் என்று தற்போது தெரியவந்துள்ளதாகவும்—

இவ்வாறு கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும் அவர்களது அடையாள தாயத்துக்களையும் திருப்பித் தருமாறு சாதாரணமாக இராணுவத் தளபதிகள் கேட்டுக் கொள்வதில்லை என்றும்-

அந்த மரபையும் மீறி சடலங்களைப் பெற்றுக் கொள்ள அவர்கள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை என்றும் பி.பி.ஸி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் சிப்பாய்களின் சடலங்களை வடக்கின் பல கிராமங்களில் மக்களின் பார்வைக்கு வைத்த பின்னர், அவை கெடத் தொடங்கி விட்டதால் எரித்து விட்டனர் என்று 'வெரித்தாஸ்' வானொலி குறிப்பிட்டது. (உ-எ-5 6)

### ஜி.சி.ஈ. (உயர்தரம்) பரீட்சை

## ஒரு தொகுதி வினாத்தாள் இன்று யாழ் வந்து சேரும்

எதிர்வரும் திங்கட்கிழமை 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி சீ.ஈ. (உயர்தரப் பரீட்சைக்கான ஒரு தொகுதி வினாத்தாள்கள் இன்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் என்று நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து யாழ். கல்வி அலுவலக அதிகாரியினால் நேற்று பலாலிக்கு எடுத்துவரப்பட்ட வினாத்தாள்களை, இன்று 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 29

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மந்திகைச் சந்தியில் கடந்த திங்களன்று இடம்பெற்ற விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் புவியரசன் (தங்கராசா மோகனதாஸ் — அன்புவழிபுரம் - திருமலை வீரச்சாவடைந்தார்.

(இ-5)

## 1,800 ஈழ அகதிகள் 12 ஆம் திகதி திரும்புவர்

சென்னை, ஜூலை 29

தாயகம் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் ஆயிரத்து 800 பேர் அடுத்த மாதம் 12 ஆம் திகதி சென்னையில் இருந்து திருகோணமலைக்கு தனிக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மாநில வருவாய்த்துறை மற்றும் அகதிகள் மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர் சி. எம். இராமதாஸ் இராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

## யுத்தக் கைதிகள் இன்று முதல் மீண்டும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகள் 33 பேரும் இன்று முற்பகல் 10 மணி முதல் மீண்டும் சாகும்வரையிலான தமது உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலி இதனை நேற்றிரவு அறிவித்தது

யுத்தக் கைதிகள் 33 பேரும் விடுவிக்கப்படுவர் என்ற உடன்பாடு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டு அது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டாலன்றி சாகும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நம்பிக்கையில்லாப் பிரேரணை:

## நேற்றைய வாக்கெடுப்பில் ராவ் அரசு தப்பி பிழைத்தது!

### அஜித் பிரிவின் 8 எம்.பிக்கள் திடீர் குத்துக் காரணம்

புதுடில்லி, ஜூலை 29

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளினால் கூட்டாகக்கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று 14 வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

அஜித்சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த 20 எம்பிக்களில் 8 எம்.பிக்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்ததை அடுத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு நரசிம்மராவ் அரசு தப்பிப் பிழைத்தது.

பிரேரணைக்கு ஆதரவாக 251 எம். பிக்களும் எதிராக 265 எம். பிக்களும் வாக்களித்தனர்.

20 எம். பிக்களைக்கொண்ட அஜித்சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியில் பிளவை ஏற்படுத்துவதில் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் இறுதிநேரத்தில் வெற்றிகண்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஏழாலையில் ஷெல் தாக்கு

ஏழாலை மேற்கு, ஜூலை 29

கடந்த திங்கள் நள்ளிரவு ஏழாலை மேற்கு, ஏழாலை தெற்குப் பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து இரண்டு ஷெல்கள் வீசப்பட்டன.

ஏழாலை மேற்கில் வளவு ஒன்றில் விழுந்த ஷெல்லினால் மாமரத்தில் இருந்த ஐந்து கோழிகள் இறந்தன. சில வீடுகளுக்கு சிறிய சேதம் ஏற்பட்டது.

ஏழாலை தெற்கில் விழி [illegible] ஷெல்லினால் குரக்கள் கோட [illegible] சேதம் அடைந்தது. (இ-45)

### படையினர் மீது ஷெல் தாக்குதல்

காரைநகர் 'கசூரினா பீச்' பக்கமாக நிலை கொண்டுள்ள படையினர் மீது நேற்றுக் காலை 6. 30 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலினால் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை

விடுதலைப் புலிகளின் ஷெல் தாக்குதலையடுத்து சவுக்கடிப் பகுதியை நோக்கிப் படையினர் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது (இ - 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிற்கு பொருள்கள்:

## 2 கப்பல்களில் பொருள்கள் ஏற்றும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வடக்கே எடுத்து வருவதற்காக 'வாதுவ', 'குமாரி' கப்பல்களில் ஒரே நேரத்தில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அட்டவணையின்படி 'வாதுவ' எதிர்வரும் 31 ஆம் திகதியும் —

'குமாரி' கப்பல் அடுத்த மாதம் 10 அல்லது 12 ஆம் திகதியளவிலும் — பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

இவ்விரு கப்பல்களிலும் தனியாருக்கே கூடுதலான பொருள்கள் ஏற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

மாணவருக்கு அறிவுரை

## கண்ணுக்கு பழக்கமில்லாத பொருள்களை தொடாதீர்!

யாழ்ப்பாணம், ஜூலை 29

"கண்ணுக்குப் பழக்கமில்லாத புதிய பொருள்களைத் தொடாதீர்" என்று அறிவுரை கூறும் துண்டுப் பிரசுரம் ஒன்றை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ளது.

"மாணவச் செல்வங்களே! கவனம்" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள அந்தப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது —

கண்ணுக்குப் பழக்கமில்லாத புதிய பொருள்களைத் தொடாதீர்! அவை-ஷெல்கள், குண்டுகள் வெடிக்கும் பொருள்களாக இருக்கலாம்—

இவை-உயிர் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே-கண்டவுடன் சமூகத் தொண்டர், ஆசிரியர் மூலம் உரிய இடத்துக்கு அறிவித்து அகற்றவும்—என்று உள்ளது (ஓ-17)

## தமிழகத்தில் தேர்தல் நடத்த உகந்த சூழ்நிலை இல்லை

### தேர்தல் கமிஷன் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 29

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்தக்கூடிய உகந்த சூழ்நிலை தமிழ்நாட்டில் நிலவவில்லை என்று தேர்தல் கமிஷன் மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது

எனவே அடுத்தமாதம் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பழனி நாடாளுமன்றத் தொகுதி மற்றும் ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி ஆகியவற்றுக்கான இடைத் தேர்தல்களை ஒட்டி அத்தொகுதிகளுக்கு-

இம்மாத முடிவிற்குள் போதுமான மத்திய பாதுகாப்புப்படையினரை மத்திய அரசு விரைந்து அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் கோரியுள்ளது

இதற்கேற்ற ஒழுங்குகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் கேட்டுள்ளது.

## புதிய பதவியில் உடுகம்பொல

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நேற்று முதல் துறைமுகங்கள் அதிகாரசபையின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சர் அலிக் அலுவிஹாரை இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். [இள]


## சைவப்பிரகாச அச்சியந்திரசாலை இந்துசாதனம்

திரு இராஜராஜேஸ்வரன் தங்கராசா அவர்கள் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையின் கௌரவ அதிபர் பதவியில் இருந்தும் இந்துசாதனம் விநியோகப் பொறுப்பிலிருந்தும் 18-07-1993 ஆம் திகதி முதல் விலகிவிட்டார் என்பதனை சைவ பரிபாலன சபை அங்கத்தவர்களுக்கும் சைவ அபிமானிகளுக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்

450. காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
27-07-1993

(சி/5533)



## SCIENCE COLLEGE
## விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**95 - A/L (விஞ்ஞானப்பிரிவு)**

புதிய பிரிவு

ஆரம்பம்: 31-7-1993 (சனி)

★ 200 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
★ மாணவர்கள் வெள்ளிக்கிழமை (30-7-93)க்கு முன்னர் அனுமதியைப் பெற்று, உங்கள் அனுமதியை உறுதி செய்யவும்.
★ மேலதிக விவரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/5531)


## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு 'வேலின் வெற்றி'' எனும் பொருள் பற்றி சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. இ. வேலாயுதம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

o o o

கொடிகாமம், ஜூலை 29

கல்லாரை வெள்ளாம் போக்கட்டியில் நாளை விடுதலைப் புலிகளின் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது. (இ-75)

o o o

பருத்தித்துறை, ஜூலை 29

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் சர்வதேச கூட்டுறவு தின விழா நாளை மாலை செம்பியன் பற்று றோ. க. த. க. பாடசாலை மைதானத்தில் நடைபெறும். சங்கத் தலைவர் திரு. சி. பொன்னம்பலம் விழாவுக்குத் தலைமை வகிப்பார். (இ-118)

## தபால்களை உடன் சேர்க்க கோரிக்கை

நாளை வெள்ளிக்கிழமை பருத்தித் துறையிலிருந்து கொழும்பு புறப்படவுள்ள குமணக்கப்பலில் வெளியூர்களுக்கான தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட உள்ளன.

நாளை வெள்ளி காலை 8-30 மணி அளவில் யாழ். பிரதம தபாலகத்திலிருந்து தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட விருப்பதால் அதற்கு முன்னதாக பொதுமக்கள் யாழ். பிரதம தபாலகத்திற்குள் இருக்கும் தபால் பெட்டியில் தபால்களை சேர்க்குமாறு வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு எஸ், எம். சேதுகாவலர் கேட்டுள்ளார். (இ-162-17)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களுடன் கூடச் செல்பவர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு யாழ் பொது வைத்தியசாலைக்கு வருமாறும், வரும்போது இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீர் கொண்டு வருமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


## Personal New Science Centre

Elilakam Front Lane,
Jaffna

**94 A/L**

★ 1 வருட பாட அலகு ரீதியான மீட்டல்.
★ 1 வருட Theory Classes

ஆரம்பம்
31-07-1993 சனி

CHE: திரு. செல்வா
PHY:
திரு. ரவீந்திரநாதன்
BOT: திரு. பாலா
ZOO:
திரு. ஈஸ்வரதாசன்
Pure } திரு.
App } குணசிங்கம்
நேரடி வளை
நிறுவனத்தில்

(சி/5532)


## தட்டெழுத்தாளர் பரீட்சை சித்தி பெற்றோர் விவரம்

### யாழ் செயலகத்துக்குக் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த வருடம் நடந்த தட்டெழுத்தாளர் பொதுப்பரீட்சையில் சித்தியடைந்த 76 பேரின் விவரங்கள் யாழ். செயலகத்துக்கு நேற்று வந்து சேர்ந்தன.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களை நேர்முகப் பரீட்சைக்காக திருமலைக்கு வருமாறு வடக்கு - கிழக்கு மாகாண சபை கேட்டுள்ளது.

தற்சமயம் போக்குவரத்து

[6ஆம் பக்கம் பார்க்க]


## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

★ 94 - A/L ★

துரித மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்

செவ்வாய்
3-00 — 5-00 தாவரவியல் — திரு. குணசீலன்
5-00 — 6-00 பௌதீகவியல் — திரு. கணேசன்

வியாழன்
3-00 — 5-00 இரசாயனவியல் — திரு மணியம்
5-00 — 6-00 பௌதீகவியல் — திரு. கணேசன்

ஆரம்பம்: 3-8-1993
செவ்வாய் (3-0) மணி

குறிப்பு:
எமது நிறுவனத்தில் கல்வி பயின்ற ''93'' A/L பிரிவு மாணவர்களுக்கென நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சையினது சகல பாடங்களுக்குமான மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை நாளை 30-7-93 வெள்ளிக்கிழமை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் பெற்றுக் கொள்ளலாம் சிறப்புத் தேர்ச்சியடைந்த மாணவர்களின் பெயர், விவரங்கள் மட்டும் 31-7-1993 உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும். (சி-5629)


## கண்ணீர் அஞ்சலி



**பரமலிங்கம் மணிவண்ணன்**

(பாபு)

(பரியோவான் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

எம் இனிய கண்ணா மணிவண்ணா
ஏன் இந்த சோகம் எம் கண்கள்தனிலே
எம் இந்து மன்றமதில் நீ பாடும் பாடல்
எம் காதில் இனிக்குதடா ஏழிசையின் பயனாய்
தடியொன்று பிடித்தாலும் தளராது நீ நடந்து
திடங்கொண்ட நெஞ்சமொடு நின்று
தமிழ் வாழப் புறம்பாடும் தமிழ் வண்ணா
வளர்கின்ற வயதில் வாழ்கின்ற பொழுதில்
பிணி என்ன கொண்டது உன்னை
இனி என்ன செய்வோம் என்னென்று
சொல்வோம்
விழியெல்லாம் ததும்ப வேதனையால் ஏங்கி
விடை தந்து நாம் நின்றாலும்
மலர்கின்ற பொழுதெல்லாம் மணிவண்ணா
உனை
மறவாது என்றும் நாம் நிற்போம்.

ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!!

இவரது இழப்பால் துயரக் கடலில் மூழ்கியிருக்கும் இவர் தம் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும் நண்பர்கள்,
1995 உயர்தர மாணவர்கள்.
யாழ். பரியோவான் கல்லூரி.

(26721)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் கருவிகளான பொலீஸார் இன்று அரசுக்கெதிராக உண்ணாவிரதம்

வடமராட்சி, ஜூலை 29

83 ஜூலையில் இடம்பெற்ற கொலைகளையும், கொடுமைகளையும், சித்திரவதைகளையும் செய்த ஸ்ரீலங்கா அரசின் கருவிகளான பொலீஸாரும், இராணுவத்தினரும் 10 ஆண்டு காலத்தின் பின் எமது பாதுகாப்பில் இருந்து கொண்டு எமது போராட்டத்திற்கு மதிப்பளித்து தமது அரசுக்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இந்தக் கால மாற்றத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். —இவ்வாறு செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் விடு

## பத்தாண்டின் காலமாற்றம் குறித்து இளம்பரிதி உரை

தலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டம் வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. எஸ். செல்வேந்திரா தலைமை வகித்தார்

இளம்பரிதி உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

ஸ்ரீலங்கா அரசு தமிழ்க் கைதிகளை எவ்வளவு கேவலமாக நடத்தினார்கள். எவ்வவு கேவலமாக கொன்றொழித்தார்கள். ஆனால் நாம் எமது பாதுகாப்பில் உள்ள யுத்த கைதிகளை எவ்வளவு கௌரவமாக நடத்துகிறோம். நாம் அவர்களது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கிறோம்.

அன்று நாங்கள் அழுது கொண்டிருந்தோம். அவர்கள் எங்களை அழ வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நாம் இன்று அழுபவர்கள் அல்லர்; அழ வைப்பவர்கள்: அன்று எங்களை ஏமாற்றினார்கள். நாங்கள் ஏமாந்து கொண்டிருந்தோம். நாம் இன்று ஏமாற்றுபவர்கள் அல்லர். எமது இனத்தினதும், மண்ணினதும் விடிவுக்காக எதையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

பத்து வருடங்களின் முன் அப்பாவிகளை சிறையில் அடைத்து கொடுமையாக கொலைசெய்தார்கள். ஆனால் 10 வருடங்களின் பின் கடந்த 25ஆம் திகதி எமது நாட்டை கூறுபோடவென அமைக்கப்பட்ட முகாம்கள் சிலவற்றை எமது படையணி தகர்த்து எதிரிகளில் பலரைக் கொன்றது. ஏராளமான ஆயுதங்களை கைப்பற்றியதுடன் 3 இராணுவத்தினரையும் சிறைபிடித்தோம் — என்றார்.

முல்லை மாவட்டக் கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வரதன் பேசுகையில் கூறியதாவது:

1983இல் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட கொடூரத்தாக்குதல்களினால் தமிழ் மக்கள் பலத்த இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்தார்கள். இது போன்ற கொடூரங்களை முறியடித்து நாம் சுதந்திரமாக வாழ வழி செய்வதற்காகவே எமது விடுதலைப் போராட்டம் நடந்து வருகிறது.

1983 ஆம் ஆண்டு அரசு நடத்திய கொடூரத்தின்போது 53 தமிழர்கள் சிறையில் வைத்துக் கொல்லப்பட்டனர். இக்கொலைமூலம் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறையை மேற்கொண்டது பகிரங்கமாகியது. கொலையுண்ட 53 பேரையும் எமது விடுதலைப் போராட்டத்தில் மறக்க முடியாது — என்றார்.

செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி பேசுகையில் கூறியதாவது;

பல்வேறு காலங்களில் பல்வேறு இனப்படுகொலைகளை ஸ்ரீலங்கா அரசு செய்துள்ளது ஆனால் ஒரு தசாப்தத்தின் முன் நடந்த வெலிக்கடைச்சிறைப் படுகொலைகளை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

உலகத்தில் பாதுகாப்பான இடம் சிறை. ஆனால் சிறையில் பாதுகாப்பு இல்லை என்பதை வெலிக்கடை கொலை எடுத்துக்காட்டியுள்ளது.

1983 இனக்கலவரத்தை அடுத்து தமிழர்கள் எமது தாயகம் தான் பாதுகாப்பு எனக் கருதி, தமிழ் ஈழத்துக்கு வந்து சேர்ந்தனர். எமக்கென ஒரு தாயகம் வேண்டும் என்பதை இச்சம்பவம் எமக்கு உணர்த்தியது.

இதைபடுத்து விடுதலைப் போராட்டம் வலுத்தது. இளைஞர் சமுதாயம் ஆயுதத்தை ஏந்தியது.

போராட்டம் தோன்றிய காலகட்டத்தில் தமிழ் ஈழமா என்ற அவநம்பிக்கை மக்கள் மத்தியில் இருந்தது. இன்று போராட்டத்தில் தெளிவு ஏற்பட்டு, விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்நம்பிக்கையை வித்திட்ட காலத்தை நாம் சிந்திக்க வேண்டும் — என்றார்.

உடுப்பிட்டி கொத்தணி அதிபர் ந. ஆனந்தராஜா உரையாற்றுகையில், "அன்று வெலிக்கடையில் கொல்லப்பட்ட 53 பேருடைய கொலையானது இன்று 53 ஆயிரம், 53 லட்சம் மக்களை போராடத் தூண்டி விட்டுள்ளது" என்றார்.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பைந்தமிழன் உட்பட மற்றும் சிலரும் உரையாற்றினர்.

(அ-173 118 9)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசையரங்கில் திரு. எல் கணபதிப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீமுத்துவிநாயகர் கோயிலில் 5-15—6-15 "பாண்டவர் ஜனனம்" எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் பிற்பகல் 2—3 மணிக்கு திரு இ. பொன்னம்பலவாணர் "திருவிழாச் சிறப்பு" எனும் பொருளில் சமயச் சொற்பொழிவு. மாலை 5-30—6-30 பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி "கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம்" எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமட்சி அம்பாள் ஆலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(க-111-126)

## ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்கப்படும். (க-161)

o o o

நீர்வேலி வாய்க்கால்தரவைப்பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவ விழாவில் நடைபெற்றுவரும் திருவிளையாடற் புராண தொடர்விரிவுரையில்—

"சித்தர் ஆடல்", 'அனைத்துயிரும் அவன் செல்வங்கள்' என்னும் பொருள்களில் இன்றும், நாளையும் மூத்த சமய விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா சொற்பொழிவாற்றுவார்.

(அ)

## டிப்ளோமா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 29

தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறி 1993—94க்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையை முடித்துக் கொண்டவர்கள் அனைவரையும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சமூகமளிக்கும்படி மேற்படி நெறியின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த)


## தமிழீழ நோக்கு

மேற்படி சஞ்சிகையின் 3ஆவது இதழ் 30-07-1993இல் வெளிவருகிறது. யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பேராசிரியர்களின் கீழ்வரும் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது.

★ பிறமொழி சொல் நீக்கிய தமிழ்மொழி
★ தமிழிலக்கியத்தில் பெண்கள்
★ விறகுத் தேவையும் அதனை ஈடுசெய்யும் வழிவகைகளும்.
★ எமது மக்களின் உள் - வெளி இடப்பெயர்வும் விளைவுகளும்.
★ இலங்கையின் உலக வர்த்தக வலயம்.

அன்பளிப்பு:


C. C. A. / அறிவகம்

கிடைக்கும் இடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை,
தமிழ்த்தாய் பதிப்பகம், அறிவகம்.

(கி-5626)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



வைத்திலிங்கம் சிங்கவேலு
(மருதனார்மடம் எரிபொருள் நிலைய உரிமையாளர்)

தோற்றம்: 05–11–1917

மறைவு: 18–07–1990

திதி: 29-07-1993

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே அப்பா!
நினைவு கூருகின்றோம் அப்பா இன்று உங்கள்
நிழலை இழந்து தவிக்கின்றோம்
நீல மயிலோன் உலாக்காணும் வேளை உம்
நினைவுகள் கண்ணீர்ப் பூக்களாய் உதிர்ந்திடவே
மூன்று ஆண்டுகள் ஆனது இதயத்தில்
முட்கள் தைக்கும் வேதனை அப்பா
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

238, கோயில் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(26713)


# NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

94 A/L

துரித மீட்டல் வினா-விடை வகுப்புகள்

சனி, ஞாயிறு வகுப்புகள்:

பிரிவு - I

| | | |
|---|---|---|
| 8-00 — 9-00 | Physics | திரு. கணேசன் |
| 9-00 — 10-00 | Botany | திரு. குணசீலன் |
| 10-00 — 11-00 | Zoology | திரு. தம்பிராஜா |
| 11-00 — 12-00 | Chemistry | திரு. சண் |
| 12-00 — 2-00 | Pure App. ] Maths | திரு. வெக்டர் |

பிரிவு - II

| | | |
|---|---|---|
| 1-00 — 2-00 | Zoology | திரு. சிறீகரன் |
| 2-00 — 3-00 | Botany | திரு குணசீலன் |
| 3-00 — 4-00 | Physics | திரு. சோதிலிங்கம் |
| 4-00 — 5-00 | Chemistry | திரு. மணியம் |
| 4-00 — 6-00 | Pure App. ] Maths | திரு. குணசிங்கம் |

ஆரம்பம்: 01–08–1993 ஞாயிறு 8 மணி

(கி-5627)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 4K.V. English Dynamo விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 51, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (26701)

புதிய இரும்பு அலுமாரிகள் (Steel Cup Board) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. தினேஸ், தேவாலய வீதி, யாழ்ப்பாணம். (6380)

### உடன் விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்ந்த கைலைன் பிறவுன் சேவல் குஞ்சுகள், இரண்டு கிழமைகள் வளர்ந்த புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [26686]

### CLEARANCE SALE

இந்திய சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

### தேவை

வீட்டு வேலைக்கு இருவருக்கு உதவியாக, 14வயதிற்கு மேற்பட்ட ஆரோக்கியமான பெண் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். இல.549, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-5530)

தொழில் திறமையுள்ள இளம் சிகை அலங்கரிப்பாளர் ஒருவர் உடன் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். மயூரா சிகை அலங்கரிப்பு நிலையம், கடற்கரை வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக), குருநகர், யாழ்ப்பாணம். (26716)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மகிமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6366)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் புலமைப் பரிசில் வினாத்தாள் 1 - 8 - 93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26712)

### ஆண்டு - 5 பரீட்சை

எம்மால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 31 - 7 - 93 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். எடிசன் அக்கடமி, யாழ் இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26699)

### ஆண்டு – 4 வகுப்பு

1994 ஆகஸ்ட் புலமைப்பரிசில் மாணவருக்கு (ஆண்டு-4) அடிப்படையில் இருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இணைய விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அனுமதிப் பரீட்சை 31-07-93 பிற்பகல் 8 மணி. ஆரம்பம் 01-08-1993 எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26700)

### புதிய வெளியீடு

பாடசாலை மேடைகளில் உங்கள் குழந்தைகள் பேச்சாளராக வேண்டாமா? பாலர் பிரிவிலிருந்து ஐந்தாம் ஆண்டு வரை மாணவர்களுக்கான பேச்சுக்கள் கட்டுரைகளாகவும் உதவும். ''என்னாலும் பேச முடியும்'' ஆசிரியர் கோப்பாய் சிவம். (26687)

### விவாக சேவை

40 வயது, இந்து, பூரம் 2, 4இல் செவ்வாய், பாவம் 13 பயிற்றப்பட்ட கணித ஆசிரியைக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோயில் வீதி, நல்லூர். (26717)

### தவறிவிட்டது

இ. தேவராஜா என்பவருடைய ஏசியா சைக்கிள் (பச்சை) கலட்டி அம்மன் கோயில் முன்றலில் தவறிவிட்டது. இது பற்றி தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். சோபனா ஆடை அகம், 16, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி-5621)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். தினமும் காலை 8-30 — 12-30, பி.ப. 3-00 — 6-00. த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (26704)

கல்வித்தடை, விவாகத் தடை, தொழில் தடை தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (26718)

### ஆண்டு - 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடத்தப்படும் புலமைப் பரிசில் (1994) பயிற்சிப் பரீட்சைத் தொடரின் மூன்றாவது பரீட்சை 31 – 07 – 1993 பிற்பகல் 8-00 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26698)

## மானிப்பாய் புனித அன்னாள் ஆலய பெருவிழா

| | |
|---|---|
| 23-7-93 | கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மாலை வழிபாடுகளும் நடைபெறுகின்றன. |
| 31-7-93 | மாலை 5-30 நற்கருணை பவனி. |
| 1-8-93 | காலை 7-15 திருநாள் திருப்பலியும் தொடர்ந்து சுரூபப் பவனியும் இடம் பெறும். மாலை 7-00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். |

அருட்தந்தை
M. ஜேசுரட்ணமும், பங்கு மக்களும்.

(6379)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இம்மண்ணில்:
13
—
04
—
1966



இறையடியில்:
01
—
08
—
1990

வேலணையூர்
### திருமதி ஜெயந்திமதி சிவராசா

ஈசன் எந்தை இணையடி நீழல்.

தங்கள் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவில் துயருறும்;
பிரான்ஸில் வசிக்கும்,
கணவர் - திரு. ந. சிவராசா,
சகோதரி - திருமதி ச. சிவராசா.
மக்கள் - சி. இலஜிதா, சி. சுஜிவன்,
சகோதரர்கள்
(வேலணை) — அம்மா, அண்ணா,
மாமா, மாமி, உறவினர்கள்.

இல. 12, 4ஆம் ஒழுங்கை,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம். (26711)

சாவகச்சேரி அருள்மிகு
### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
வழங்கும்
கைதடியூர் நாதஸ்வரக் கலைஞர்
மேற்படி தேவஸ்தான நாதஸ்வர வித்துவான்
### திரு. து. சத்தியநாதன்
அவர்களை
கௌரவிக்கும்
## ★ பாராட்டு விழா ★

இடம்: சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

காலம்: ஆடி 15ஆம் நாள் (30 07-1993) வெள்ளிக்கிழமை மாலை 5மணி

தலைவர்: சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் அவர்கள்

மங்கள விளக்கேற்றல்:
பிரம்மஸ்ரீ இ. வெங்கட்ராமன் தம்பதிகள் [யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர்]

பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
தங்கப்பதக்கம், கௌரவப்பட்டம் வழங்கல்:
தேவஸ்தான தர்மகர்த்தா அவர்கள்

இன்னும் பல பேரறிஞர்கள் சிறப்புரை வழங்குவார்கள். அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
பிரம்மஸ்ரீ ப. மகாகணபதிசர்மா,
(தர்மகர்த்தா).

(26706)

உ
புங்குடுதீவு - கிழக்கு,
கலட்டி - ஸ்ரீவரசித்திவிநாயகர்
தேவஸ்தானம்
## ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்
30 – 07 — 1993 (வெள்ளிக்கிழமை)

மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டித்த பக்தர்களுக்கான எல்லாவித ஏற்பாடுகளும் இம் முறை

தாவடி - பிள்ளையார் கோயில் மகாலக்ஷ்மி சந்நிதானத்தில் செய்யப்பட்டுள்ளன.

நாளை முற்பகல் 11-00 மணிக்கு
விசேஷ அபிஷேகமும்
12-00 மணிக்கு பூசை - கௌரி காப்புக் கட்டுதல்
என்பனவும் இடம்பெறும்,


வற்றாத செல்வத்தை வரையாது வழங்கும் மகாலக்ஷ்மியின் திருவருள் பெற்றுய்ய அன்பர்களனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி வனிதா ஜெயசீலன்,
திருமதி பிறேம்ஜெயா சிவகுமார்,
உபயகாரர்கள்.

புங்குடுதீவு. (26715)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
19
—
03
—
1927



மறைவு:
09
—
06
—
1992

### அமரர் சோமசுந்தரம் ஐயாத்துரை

ஆறுமுகன் சந்நிதியில் காத்திருந்த காலனவன் நின்னுயிரை கவர்ந்து ஓராண்டு ஆனதையா! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட எம் அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆயிரம், ஆயிரம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

(26714)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்?

வடக்கு - கிழக்கில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வெகு எளிதாகக் கூறியிருப்பவர் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேசியபோதே பிரதமர் மேற்கண்டவாறு சொல்லியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் போர் நடக்கிறது. அதனால் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டது. அரச ஆணை வடக்கு - கிழக்கில் செல்லுபடியற்றதாகி விட்டது. வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் வேறு, அரசு வேறு என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

அரசாங்கம் அப்பகுதி மக்களைத் தனது பிரசைகளாகக் கருதி அவர்களுக்குரிய சேவைகளைச் செய்யவில்லை. அதற்கு மாறாக பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்பனவற்றை நடைமுறைப் படுத்தி அவர்களின் அடிப்படை வாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்கின்றது; அவர் தம் அடிப்படை உரிமைகளை அத்துமீறிப் பறிக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் அவர்களைக் கொல்கிறது. அவர்களின் சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயரச் செய்கிறது.

தனது பிரசைகளின் வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவித்துக் கொண்டு சம்பந்தப்பட்ட மக்களை வேற்று நாட்டு மக்களைப் போல, எதிரிகளாக நோக்கி அழித்துவரும் அரசு, எப்படி அவர்கள் வாழும் பகுதியில் தனது சிவில் நிர்வாகத்தை உருவாக்க முடியும்? அது எவ்வாறு நடைமுறைச் சாத்தியமாகும்?

வடக்கு - கிழக்கில் கொழும்பு அரசின் சிவில் நிர்வாகத்தை சீராக்கப் போகிறோம் என்று வெறுமனே வாய்ச் சொல்லாடினால் கருமம் நடந்துவிடுமா? அதற்கான தள நிலைமை உருவாக்க வேண்டாமோ? அதற்குச் சில அடிப்படை வழிமுறைகள் செயலாக்கப்பட்டாக வேண்டுமே?

வடக்கு - கிழக்கில் நடக்கும் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் அவ்வாறு அமைதிக்கு வழிகோலிய பின்னர், போருக்குக் காரணமாகவுள்ள பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். அதன் பொருட்டு சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் பேச வேண்டும். சமாதானம் உருவாக வேண்டும்.

இந்த வழிமுறைகள் எதுவும் இன்றி வடக்கு - கிழக்கில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை உருவாக்குவது என்று கூறுவது பொருத்தமற்றது. அதிமேற்றிராணியார் ஒருவரிடம் அதனைக் கூறுவது அவரது புத்திக்கூர்மையைக் குறைத்து எடை போடுவதாகும்.

அவ்வாறில்லை எனின்—

முன்னர் சொன்ன வழிமுறைகளை புறந்தள்ளிவிட்டு வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகத்தைச் சீராக்குவதென்றால் பிரதமர் இராணுவத் தீர்வையே மனதில் கொண்டு பேசுகிறார் என்பதே அர்த்தம்!

இராணுவத் தீர்வு வடக்கு-கிழக்குப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரப்போவதில்லை. யுத்த நிறுத்தமும், அரசு - புலிகள் பேச்சு மூலமான அரசியல் தீர்வுமே உகந்தது என்று பலர் எடுத்துக் கூறியும் அது கொழும்புத் தலைவர்களுக்கு காதில் விழாதது ஏனோ? மதிப்புக்குரிய மதகுருமார் உட்பட மக்களையும் உலகத்தையும் இவ்வாறு எத்தனை காலம் தான் ஏமாற்றப் போகிறார்கள்?

# வில்பத்து காட்டில் தேடுதல்; மக்கள் நடமாடத் தடை

கொழும்பு, ஜூலை 29

கடந்த சில தினங்களாக வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பிரதேசத்தை அண்டிய காட்டுப் பகுதிகள் எங்கும் பெரும் தேடுதல் வேட்டை இடம்பெற்று வருகிறது.

பல நூற்றுக்கணக்கான படையினர் அப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேடுதல் இடம்பெற்று வருவதால் வில்பத்து வனவிலங்கு சரணாலயத்துக்கு பொது மக்கள் செல்வது தடைசெய்யப் பட்டுள்ளது. அப் பகுதி காடுகளிலும் மக்கள் உட்பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையும், அதற்கு சில தினங்களுக்கு முன்னரும் புத்தளம் மாவட்டத்திலுள்ள வில்பத்து காட்டுப் பகுதியில் இலவங்குளம் பொலிஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் இரு தடவைகள் தாக்குதல் நடத்தியதும்—

இவ்விரு தாக்குதல்களிலும் 15க்கும் மேற்பட்ட பொலிஸார் உயிரிழந்தனர் என்பதும் தெரிந்தவையே.

(ஓ-3)

## வாக்களித்த மக்களே என்னை நீக்க முடியும்!

### இப்படிக் கூறுகிறார் அனுரா

கொழும்பு, ஜூலை 29

''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு விதித்திருக்கும் ஒழுக்க நெறிக் கோவை என்னைக் கட்டுப்படுத்தாது நான் இப்போது சுதந்திரக் கட்சி எம்.பி. இல்லை''

''என்னை நாடாளுமன்றத்தில் இருந்து நீக்க கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவினால் முடியாது. வாக்களித்த மக்களுக்கே அந்த உரிமை உண்டு''

சு.கவில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு கூறியுள்ளார்

கட்சியில் உள்ள ஒருசிலர் எனக்கு விரோதமாகப் பல சூழ்ச்சிகளைச் செய்ய ஆரம்பித்து என்னைக் கட்சியில் இருந்து நீக்க திட்டமிட்டுப் பழி வாங்கும் விதத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

ஸ்ரீல. சு கவின் போக்கைக் கண்டித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்த இருக்கிறோம். ஹொரகொல்லை கூட்டம் இதன் ஆரம்பமே— என்றும் அனுரா கூறியுள்ளார். (ஓ-3)

## சுவீடிஷ் பேராசிரியர் வர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

சுவீடிஷ் உப்சால் பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர் ஷோக் இலங்கை வருவதற்கான அனுமதியை ஸ்ரீலங்கா அரசு மறுத்து வருவதாகத் தெரியவருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்துடன் உப்சால் பல்கலைக்கழகம் கொண்டுள்ள இணைப்பு, கல்வி முறை பற்றி ஆராயத் தாம் அங்கு செல்ல அனுமதி தருமாறு அவர் பல தடவை கோரியும் ஸ்ரீலங்கா அரசு அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பேராசிரியர் பீற்றர் ஷோக் இலங்கைத் தமிழர் பிரச்சினையில், ஸ்ரீலங்கா அரசுக்கு,சுவீடிஷ் அரசு மூலம் நெருக்குதல்களை கொடுத்து வருகிறார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன என்றும் தெரிய வருகிறது.

பேராசிரியர் ஷோக் ஏற்கனவே பல தடவைகள் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-3)

### பிறப்பு - இறப்புப் பத்திரம்:

## இடம் பெயர்ந்த இடத்தில் பதிவுகளைச் செய்ய வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 29

''யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தமது இறப்பு, பிறப்புப் பதிவுகளை தற்போது தங்கியுள்ள பகுதியில் உள்ள பதிவாளர்களிடமே செய்து கொள்ள வேண்டும்''.

காணிப் பதிவாளரும்,மேலதிக மாவட்டப் பதிவாளருமான திரு. என். சதாசிவ ஐயர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வலி-வடக்கு, வலி-மேற்கு மற்றும் தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழும் மக்களின் நன்மை கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் தமது பிரிவுப் பதிவாளர்களிடம் செல்லத் தேவையில்லை. இடம்பெயர்ந்த பகுதியில் உள்ள பதிவாளர், கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு பிறப்பு,இறப்பு பதிவுகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்றார். (ஓ-3)

## இன்று

யாழ்றரன் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து இளைப்பாறிய திருமதி ப. கிருஷ்ணனுக்கு இன்று வியாழன் காலை 9-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பிரிவுபசார வைபவம் நடத்தப்பட உள்ளது. (இ)

○ ○ ○

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மனைப் பொருளியல் கைத்திறன் கண்காட்சி, இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 4-30 மணிவரை நடைபெறும்.

### கலந்துரையாடல்

கால்நடை வளர்ப்போருக்கான கலந்துரையாடலொன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலில் ஆடு, மாடு, கோழி, செம்மறி போன்ற கால்நடைகளை பண்ணைகளாகவும், சிறிய அளவிலும் வைத்திருப்பவர்களும்—

இறைச்சிப் பாவனைக்காக வெளி மாவட்டங்களில் இருந்து ஆடு, மாடுகள் கொண்டு வருபவர்களும் —

மற்றும் கோழிக்குஞ்சுகள் கொண்டுவந்து விற்பனை செய்பவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோரப் பட்டுள்ளது. (இ)

### நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

## சைவசமயப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29


நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவ சமய விவகாரக் குழுவினால் வருடா வருடம் நடத்தப் பட்டுவரும் சைவசமயம் சார்ந்த போட்டிகள் வழமை போல் இவ்வாண்டும் நடைபெறவுள்ளன.

சமய அறிவுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய அறிவுப் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி ஆகிய போட்டிகளே நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ள சுகாதார அலுவலகத்திலும், மாநகராட்சி மன்றத்தின் பிரதான அலுவலகத்திலும், இந்து விடுதி அலுவலகத்திலும் எதிர்வரும் ஆவணி மாதம் 8ஆம் திகதி பிற்பகல் 5-00 மணிவரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### நூல் நிலைய வசதி

யாழ். மாவட்டத்தில் செயற்படும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்குநூல் நிலைய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை தேசிய கல்வி நிறுவனம் செய்து கொடுக்க முன்வந்துள்ளது. (க-11)



## ஆறுமுகமான பொருள்

ஊறுவிளை பகைவர் படை
 வீழ்த்து முகமொன்று
உயிரனைய தமிழாகி
 வந்த முகமொன்று
சூளியர் கோன் குலமகளைக்
 கவர்ந்த முகமொன்று
குவலயத்தைக் காக்க மயில்
 ஏறு முகமொன்று
நாடிநிதம் தொழுவார் துயர்
 தீர்க்கு முகமொன்று
நாதாந்த சோதிவடி
 வான முகமொன்று
ஆறுமுகமான பொருள்
 நீ அருள வேண்டும்
அழகொளிரு நல்லைப் பதி

-நெடுந்தீவு லக்ஸ்மன்.

# பெற்றோர் கலைத்துறையில் தமது பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும்

### மிருதங்க அரங்கேற்றத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

''செம்மை சான்ற ஆய கலைகளுள் ஒன்றான இசை ஒழுக்கத்துக்கு முக்கியமானது ஆகும். மாணவர்கள் இசையைப் பயில வேண்டும். பெற்றோர் கலைத்துறையில் பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும்''

செல்வன் காங்கேயன் ஆதவனின் மிருதங்க அரங்கேற்றத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினார்.

இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''திரு. சிதம்பரநாதன் தன்னிடமுள்ள கலைத்திறமையை தனது மாணவரிடத்தில் கையளித்த பாங்கு இம் மாணவனூடாக நன்கு வெளிப்படுகின்றது. பல்வேறு தொழில்துறைகளை பயில்வது போன்று தொழில் முறைக் கலைஞர்களும் உருவாக வேண்டும்'' என்றார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் பேசும்போது,

தனது இயல்பாற்றலை சகல துறைகளிலும் வளர்த்துக் கொண்ட எமது கல்லூரி மாணவன் ஆதவனின் தனித்துவமான ஆற்றலை நான் பாராட்டுகிறேன்'' என்று கூறினார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா, யாழ். கல்விக்கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், திருமதி காங்கேயன் ஆகியோரும் பேசினார்கள். யாழ். புனித பொஸ்கோ கல்லூரி அதிபர் அருட்செல்வி ஜெரோம் ஆசியுரை வழங்கினார். அன்பர்கள், அபிமானிகள் பலர் ஆதவனுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர். (க-111)

### பாடசாலைகளில்

யாழ் வருணி மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

○ ○ ○

மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பரிசில் விழாவும், கலை விழாவும் இன்று வியாழன் பாடசாலை அரங்கில் அதிபர் க. சின்னராசா தலைமையில் நடைபெறும். (ஓ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். கல்விக்கோட்ட விளையாட்டுக் குழுவினால் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட— 19 வயதுக்குட்பட்டோர் — மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் சென். சாள்ஸ் ம. வி. அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதும்.

கனகரத்தினம் ம. ம. வி. அதிபர் திரு. மு. இராமலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. அருண் மாஸ்டர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் மயிலணியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் மூன்றாம் சுற்று ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- சுன்னாகம் கலைவாணி வி.க. எதிர் சண்டிலிப்பாய் வசந்தசிறி வி.க.

★ 4.30 மணி:- மயிலிட்டி ஒற்றுமை வி.க. எதிர் நவாலி தென்றல் வி.க.

# செய்திக் கொத்து

## மலரஞ்சலி

ஆனையிறவுப் போரில் வீரச்சாவடைந்த லெப். கேணல் சராவின் நினைவு தினத்தையொட்டி கல்வியங்காடு சந்திக்கு அருகில் அமைந்துள்ள அவரது உருவப்படத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட துணைத் தளபதி திரு. மகான் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்தார். (ஒ 5)

## பிரதேச செயலர்

வலி. வடக்குப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திரு. கா. சந்திரராஜா சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவருடைய இடத்திற்குப் புதிய பிரதேச செயலாளராக திரு. நா. வேதநாயகன் பதவியேற்றுள்ளார். (க-162)

## பாராட்டு

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராசேஸ்வரி பேய்ச்சியம்பாள் ஆலயத்தில் கடந்த 23ஆம் திகதி பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் பொன்னாடை போர்த்து பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி ஆலய பேய்ச்சியம்பாளுக்கு 21வருடங்களுக்கு முன்னர் வீரமணிஐயரால் பாடப்பெற்ற ஊஞ்சல் பாட்டை அவராலேயே இசைக்கப்பட்டமையைக் கௌரவித்தே அவர் கௌரவிக்கப்பட்டார். (க)

## இலவச வகுப்புகள்

மானிப்பாய் புனித அந்தோனியார் இடம் பெயர்ந்தோர் அகதி முகாமில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஆண்டு 2 முதல் ஆண்டு 11 வரை மாணவர்களுக்கு இலவச வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. (க-152)

## பேச்சுப் போட்டி

சரசாலை இந்து மன்றம் நடத்தும் பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும். [க-30-117]

## பழுதடைந்த அம்புலன்ஸ்

கடந்த 4 மாதங்களுக்கு மேலாக வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் பழுதடைந்த நிலையில் உள்ளது. [க-155]

## புதிய பங்குத்தந்தை

பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம், அடிகளார் குருநகர் பங்குக்கும், குருநகர் பங்குத் தந்தை அருட்திரு. பி. எம். இமானுவேல் பருத்தித்துறை பங்குக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (க-173)

## வாழைப்பழம் விலை அதிகரிப்பு

வாழைப்பழத்தின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. கதலிப்பழம் கிலோ 27ரூபா முதல் 30ரூபா வரை விற்கப்படுகிறது. மண்எண்ணெய் விலையேற்றம் காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்தமையும், பல வாழைத் தோட்டங்கள் நீர் பாய்ச்ச முடியாமையினால் அழிந்தமையுமே இதற்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

## நூல் அன்பளிப்பு

திருநெல்வேலியில் இயங்கும் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு சுவாமி விவேகானந்தரின் 'ஞானதீபம்' என்னும் நூலின் பத்துத் தொகுதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சியாக இக்கலாசாலையில் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சி முடிவில் இந்நூல் தொகுதிகளை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா வழங்கினார். இவற்றைகலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா பெற்றுக்கொண்டனர்.

# இலங்கை 4 விக்கெட்டுக்கு 200 ஓட்டங்கள்

கொழும்பு, ஜூலை 29

இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கை அணியின் கப்டன் அர்ஜுன ரணதுங்க ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களை எடுத்தார். அஷான் திலகரத்ன ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களை எடுத்தார்.

இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களை எடுத்தது.

## ஆயுள்வேத மருந்து விற்பனை

வடமராட்சி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி சித்த ஆயுள்வேத மருந்து விற்பனை நிலையம் ஒன்றை நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ளது.

## "சுப்பசொனிக்" பரபரப்பு

திருநெல்வேலி, கோப்பாய் பகுதிகளில் நேற்று முன்தினம் பொதுமக்கள் பலரை பலிகொண்ட இரு சுப்பசொனிக் விமானங்களும் குடாநாட்டில் ஏனைய பல பகுதிகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

நேற்று முன்தினம் காலை தென்மராட்சிப்பகுதி வான்பரப்பில் பேரிரைச்சலுடன் விமானங்கள் வட்டமிட்டதால் மக்கள் பதற்றம் அடைந்தனர்

சாவகச்சேரி சந்தையில் நின்ற பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் வெளியான பகுதிகளை நோக்கி ஓடினர். (ஒ-117)

## நேற்றைய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

8 பேரை அவர்கள் தம் பக்கம் திருப்பியது மூலம் ஆட்சியை தக்க வைத்துக் கொண்டனர்.

இரண்டு ஆண்டுகளாக பதவியில் இருந்து வரும் நரசிம்மராவ் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவாகும். (இ-எ)

## யுத்தக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தாம் கைவிடப்போவதில்லை— என்று யுத்தக் கைதிகளின் சார்பில் கருத்து வெளியிட்ட திரு. பி. எஸ் பண்டார என்ற பொலீஸார் தெரிவித்தார்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி தாம் மேற்கொண்ட சாகும்வரையிலான உண்ணாவிரதத்தால் யுத்தக் கைதிகளில் சிலர் தொடர்ந்து உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர் என்றும்—

ஆயினும் தாம் விடுவிக்கப்படவேண்டும், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே தாம் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாகவும்—

விடுவிக்கப்படவேண்டும் அல்லது இறந்துவிடவேண்டும் என்ற முடிவுடனே உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதாகவும் அவர் சொன்னார். (இ-5)

## தட்டெழுத்தாளர்..,

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையால் இவர்கள் திருகோணமலைக்கு வருவது கஷ்டம் என்றும்—

நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யுமாறும்—

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ... சபையை கோரியுள்ளனர். (உ-8)

# செஞ்சிலுவை மூலமே 'பனடோல்' விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வர்த்தகர்களுக்கு இனி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை மூலமே பனடோல் வில்லைகள் விநியோகிக்கப்படும்.

தனியார் வர்த்தகர்கள் பனடோல் வில்லைகளை தரைமார்க்கமாக எடுத்து வருவதற்கு கட்டுப்பாடுகள் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளை கப்பல் மூலம் பனடோலை வரவழைத்து விநியோகிக்கும்.

குமண கப்பலில் ஏற்கனவே 60 லட்சம் பனடோல் வில்லைகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு வந்து சேர்ந்திருப்பதாகவும் —

ஒரு பனடோல் வில்லை 78 சதத்துக்கு தனியார் வர்த்தகர்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் —

ஆகக் கூடியது 85 சதத்துக்கு அவர்கள் விற்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-17]

## உபவேந்தர் பயணமானார்

லண்டனில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பொதுநல அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கான மாநாட்டில் கலந்து கொள்ள யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார்.

கொழும்பில் இருந்து 8 ஆம் திகதி லண்டன் செல்லும் அவர் மாநாட்டில் கலந்து கொண்டபின்னர் சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

நோர்வேயில் உள்ள பல்கலைக் கழகத்துடன் இணைந்து யாழ். பல்கலைக் கழகத்தில் கடற்றொழில் பீடம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பான உடன்பாடு ஒன்றை மேற்கொள்ள விருப்பதாக கொழும்பு செல்லமுன் உபவேந்தர் தெரிவித்தார்.

# 50 எம். பிக்களின் ஆதரவு ஸ்ரீமாவோவுக்கு

கொழும்பு, ஜூலை 29

அனுரா பண்டாரநாயக்காவுக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இடையிலான தற்போதைய நெருக்கடியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக உள்ளனர் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்து சிறிமாவோவை வெளியேற்ற அனுரா குழுவினர் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் சிறிமாவோவுக்கு விசுவாசம் தெரிவித்தும், அவர் தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவியாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தும் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்சியில் 67 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# சிந்துபால் வெல்லக்கட்டி உற்பத்தி

கிளிநொச்சியில் பசுப்பாலை மூலப்பொருளாகக் கொண்டு சிந்துபால் வெல்லம் என்னும் பெயரில் பால் வெல்லம் தயாரிக்கும் திட்டம் ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கனகபுரம், அம்பாள் நகர், விநாயகர்புரம் போன்ற இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கால்நடை உரிமையாளர்கள் பசுப்பாலை சந்தைப்படுத்தும் வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

தற்போது மாதம் ஒன்றுக்கு சுமார் 3லட்சம் பால் வெல்லக்கட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதோடு இதுவரையும் 85 வறிய குடும்பத்தைச் சார்ந்தோர் வேலைவாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சிக் கோட்டத்தின் ஏனைய வட்டத்திலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டு வருகிறது. (ஒ)

## கைப்பற்றப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| o | தொடர் ரவை | — 500 |
| o | ரி 56 மகஸீன் | — 11 |
| o | 203 ஷெல் | — 12 |
| o | மி 81 மகஸீன் | — 05 |
| o | நடுத்தர ரவை | — 460 |
| o | தொலைத் தொடர்பு சாதனம் | — 01 |
| o | ஏ. கே. மகஸீன் ஹோல்சர் | — 04 |
| o | சப்பாத்து | — 05 சோடி |
| o | இராணுவத் தொப்பி | — 04 |
| o | தலைக்கவசம் | — 03 |
| o | இராணுவப்பட்டி | — 01 |

(உ - 5)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தசாமி

இலுப்பையடிச்சந்தி லிங்கம்ஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் நாகலிங்கம் கந்தசாமி கொழும்பில் 26-07-1993 இல் காலமானார். இவர் நாகலிங்கம் அன்னப்பிள்ளையின் அன்பு மகனும், கரம்பன் மேற்கைச் சேர்ந்த சுப்பையா திலகவதியின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், சாந்தினி (கனடா), குமுதினி (கொழும்பு), விசாகன் (ஜேர்மனி), கோடிதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஸ்ரீதரன் (கனடா), பிரபாகரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சண்முகவடிவின் அன்புச் சகோதரனும், பொ. நடராசாவின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 29-07-93 வியாழக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வை. அருணகிரி

ஆரணி மில்,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(26719)



## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நடராசா

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகக் கொண்டிருந்த வேலுப்பிள்ளை நடராசா நேற்றிரவு காலமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், செல்வரத்தினத்தின் (உள்ளூராட்சித் திணைக்களம் - யாழ்.) அன்புத் தந்தையும், சரோஜினிதேவியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஆரயம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: ந. செல்வரத்தினம் (மகன்)

முதலியார் மகேசன் வீதி,
நவாலி தெற்கு.

(26722)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org